Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாறபெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 22 ஆம நாள் முஹர்ரம் 22 (4-6-64) வியாழக்கிழமை இதழ் 116

அங்கீகாரப்படி
தேசிய லொத்தர் (சுவீப்)
ஏக விநியோகஸ்தர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
சில்லறை வியாபாரத்திற்கு ஆள் தேவை
ரூ. 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும்

# 'திடீர் நடவடிக்கை எடுக்க இது சமயமல்ல'

## தமிழரசுக்கட்சி கருத்து

## ● கட்டாய ஓய்வுபற்றி திருமலையில் 20-ந் திகதி கமிட்டி தீர்மானிக்கும்

யாழ்ப்பாணம், வியாழன்

சிங்களத்தில் தேர்ச்சிபெறவில்லையென்பதற்காக அரசாங்கசேவையிலிருந்து கட்டாயமாக தமிழ் அரசாங்க ஊழியர் வெளியேற்றப்படுவது சம்பந்தமாகவும் சிறுபான்மையினர் விஷயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்தாமலிருப்பதுபற்றியும் என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி இம்மாதம் 20-ந் திகதி திருக்கோணமலையில் நடைபெறவிருக்கும் தமிழரசுக் கட்சியின் கமிட்டிக்கூட்டம் முடிவுசெய்யும்.

கட்டாய ஓய்வு உத்தரவு சம்பந்தமாக பிரதமருக்கு திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்துக்கு இவ்வாரத்துக்குள் பதில் கிடைத்துவிடுமென தமிழ் அரசுக்கட்சி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன. இருபதாம் திகதிக்கு முன் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி – லங்கா சமசமாஜக்கட்சி கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டுஅரசியலில் ஓரளவு ஸ்திரமான நிலையேற்பட்டுவிடுமெனவும் இதன்பின் சிறுபான்மையினர் நிலை எவ்விதமுள்ளதென்பது பற்றி பரிசீலனை செய்வதே விவேகமென்றும் தமிழரசுக்கட்சியின் மேலிடம் கருதுவதாக அறியப்படுகிறது.

சென்ற சனிக்கிழமை கொழும்பில் கூடிய தமிழரசுக் கட்சியின் கமிட்டி கட்டாய ஓய்வு உத்தரவுகள்பற்றிப் பரிசீலனை செய்ததெனினும் தீர்மானம் எதுவும் செய்யாமல் கூட்டத்தை ஒத்திவைத்தது. இன்றுள்ள அரசியல் நிலையில் தீவிரமாக ஆலோசிக்காது திடீர் நடவடிக்கை எடுப்பது அரசாங்கத்துக்குச் சாதகமான நிலையை ஏற்படுத்தக் கூடுமென்றும் தமிழரசுக்கட்சி கருதுவதாக கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

---

## ● சென்னையில் புனித அஸ்தி

### பல்லாயிரம் மக்கள் அஞ்சலி

சென்னை, ஜூன் 3

நேருஜியின் அஸ்தி இன்று பகல் புதுடில்லியிலிருந்து விமானமார்க்கமாக சென்னைக்கு கொண்டுவரப்பட்டது. புனித அஸ்தியை தமிழ் நாடு முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சலம் கொண்டு வந்திருந்தார்.

நேருஜியின் புனித அஸ்திக்கு தங்களது இறுதி அஞ்சலியைச் செலுத்தும் பொருட்டு பல்லாயிரக் கணக்கான மககள் இன்று மீனம்பாக்கம் விமான நிலயத்துக்கு வந்திருந்தனர். கொதிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது தாய்மார்களும் பெரியவர்களும், சிறுவர்களும், குழந்தைகளும் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர். ராஜ்ய அமைச்சர்கள், எம். பி. ககள், நீதிபதிகள், அரசாங்க உயர் அதிகாரிகள், சென்னை மேயர் சபாநாயகர் உட்பட பல்வேறு வெளிநாடுகளின் ஸ்தானிகர்களும் இன்று காலை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

விமானத்தில் கொண்டுவரப்பட்ட நேருஜியின் அஸ்தியை முதன் மந்திரி திரு பக்தவத்சலம், தேசிய மூவர்ணங்கிளுளான மலர்களினலும் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு ஜீப் வண்டியில் வைத்தார். ஜீப்பின் மத்தியிலுள்ள உயர்ந்த பீடத்தில் பொது மக்கள் தரிசனத்துக்கு வைக்கப்பட்டது. புனித அஸ்தியை சுமந்து சென்ற ஜீப் வண்டி சென்னை நகரின் பல வழிகளினூடாகவும் சென்று ராஜாஜி மண்டபத்தை போய்ச் சேர்ந்தது. நேருஜியின் இறுதிச் சடங்குகளில் நேரில் கலந்து கொள்ள முடியாது கண்ணீர் விட்டு வருத்தப்பட்ட ஆயிரக்கணககான மக்கள், வீதியின் இரு மருங்கிலும் கூடி நின்று பயபக்தியுடன் புனித அஸ்திக்கு அஞ்சலி செலுத்தினர். பக்தி பரவசத்தினல் பலர் கண்ணீரும் விட்டனர்.

நேருஜியின் புனித அஸ்தி ராஜாஜி மண்டபத்தில் இன்று முதல் திங்கட்கிழமைவரை பொது மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்பட்டிருக்கிறது அஸ்தி வைக்கப்பட்ட நிமிடம் முதல் மக்கள் "கியூ" வரிசையில் சென்று தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இம்மாதம் 8-ம் திகதி கன்னியா குமரியில், புனித அஸ்தி கரைக்கப்படும்.

---

## தாக்குதல் திட்டங்கள்?

புதுடில்லி, ஜூன் 3

ஜம்முவில் பாகிஸ்தான் புதிய விமானநிலையமொன்றை அமைத்துவருவதாக இந்திய அரசாங்கத்துக்கு செய்தி கிடைத்துள்ளது இந்தப்பகுதியிலுள்ள அப்பாவி மக்களுக்கு பாகிஸ்தானியர் இலவசமாக ஆயுதங்களை விநியோகித்து வருவதாகவும் அந்தச் செய்தி கூறுகிறது. இதுகுறித்து இந்திய அரசாங்கம் முன் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக அறிவிக்கப்படுகிறது.

∴ ∴ ∴

ரோம், ஜூன் 3

கம்யூனிஸ்ட் சீன, புதிய தாக்குதல் திட்டங்களைத் தயாரித்துவருவதாக இத்தாலிய பத்திரிகையொன்று அறிவித்துள்ளது. இதுசம்பந்தமாக இந்திய அரசாங்கம் முன் எச்சரிக்கையாக விருப்பதாக இந்திய அரசாங்க அதிகாரியொருவர்தெரிவித்தார்.

---

## இராணுவச் சட்டம் பிரகடனம்

சியோஸ், ஜூன் 3

தென் கொரியாவின் தலைநகரமான சியோலில் பொலிஸாருக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்குமிடையே பல தடவைகளில் ஏற்பட்ட கைகலப்புகளைத் தொடர்ந்து இராணுவச்சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இன்று ஆயிரக்கணக்கான மாணவர்கள் அதிபரின் இல்லத்துக்குச்செல்ல மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது. "நாங்கள் பசியுடன் இருக்கின்ரும்" என்று மாணவர்கள் கோஷித்தனர்.

---

புரட்சிச் சதி

## நீதிமன்றத்தில் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகள்

### பீலிக்ஸ் வெள்ளிக்கிழமை சாட்சியமளிக்கலாம்

கொழும்பு, புதன்

புரட்சி சதிவழக்கு விசாரணைசெய்யப்படும் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பு நடவடிக்கையை பலப்படுத்தவேண்டுமென்று, பொலிஸ் அதிகாரிகள், ராணுவ தலைவர்கள், நீதிமன்ற உத்தியோகஸ்தர்கள் ஆகியோர் கூடிய ஒரு மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

புரட்சி சதிவழக்கு நீதிமன்றத்தில் ஏற்கனவே உள்ள பாதுகாப்பு நடவடிக்கையை அவதானித்ததன் விளைவாகவே மேற் கூறிய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இம் மகாநாட்டில் உயர் நீதிமன்ற ரிஜிஸ்தார் திரு. வி. நவரத்தினம், மற்றும் உயர்தர பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். பிஸ்கால் உத்தியோகத்தர்களும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள்.

தற்பொழுது இராணுவத்தினர் நீதிமன்றத்தின் வெளியே காவல்புரிகின்றனர். அவர்கள் எதிரிகளை நீதிமன்றத்திற்கும், நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கும், கூட்டிச்செல்கின்றனர். பொலிஸ் உத்தியோகத்தர் முன்செல்ல, எதிரிகள் பிஸ்கால் வான்களிலும், கார்களிலும் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றனர், தினமும் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கு அதிகமானேர் காவல்புரிகின்றனர். கடமையிலிருக்கும், பொலிஸாரும், இரா

(6-ம் பககம் பார்கக)

---

## பிரதமருக்கு இடதுசாரியினர் பதில் அனுப்பினர்

கொழும்பு, புதன்

ஐக்கிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த மூன்று காரியதரிசிகளும் இன்று பிரதமர் ஸ்ரீமா பண்டாரநாயக்காவிற்குத் தங்கள் பதில்களை அனுப்பியுள்ளார்கள்.

கூட்டரசாங்கத்தில் பிலிப்பிற்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் இடமளிப்பதில்லை என்ற சுதந்திரக்கட்சியின் முடிவை கடந்தமாதம் பிரதமர் ஐக்கிய இடதுசாரி முன்னணியினருக்கு அனுப்பியிருந்தார். அதற்குப் பதிலளிக்குமுகமாகவே மேற்கூறிய கடிதங்களை காரியதரிசிகள் அனுப்பியுள்ளார்கள்.

ஐக்கிய இடதுசாரி முன்னணியால் பிரதமருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில், திருவாளர்கள் பீட்டர் கெனமன், லெஸ்லி குணவர்த்தன, எம். டி. பெரேரா ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

பிரதமர் அனுப்பிய கடிதத்தைப் பெற்றுக்கொண்டதாகவும், அக் கடிதத்தை மிகவும் கவனமாகப் படித்ததாகவும் பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளனர் என தெரியவருகிறது.

---

பரந்தன்

## இரசாயன தொழிலாளர்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், வியா.

பரந்தன் இரசாயன தொழிற்சாலை தொழிலாளர்களின் கோரிக்கைகள் சம்பந்தமாக எந்தவித உடன்பாடும் ஏற்படாத காரணத்தால் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தன் இரசாயன கார்ப்பரேஷன் தலைவர் திரு. ஜி. அமிர்தநாயகம் நேற்று தொழிற்சங்கங்களின் இணைப்பு கமிட்டி அங்கத்தவர்களை சந்தித்து ஊழியர்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுக்கள் நடத்தினர். ஆனல் பேச்சுக்களில் எவ்வித உடன்பாடும் காணப்படவில்லை.

இதன் பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் வேலை நிறுத்தத்தை நீடிப்பதென்று முடிவு செய்யப் பட்டது. இக் கூட்டத்தில் இலங்கை தொழிற்சங்க சம்மேளன பிரதிநிதிகள் திருவாளர்கள் வி. ஏ. கந்தசாமி, ஆர். பொன்னையா உட்பட பலர் பேசினர்.

**மணிவாக்கு**

மக்கள் நேரு சொல்வதைக் கேட்கிறார்கள். நேரு காந்தி சொல்வதைக்கேட்கிறார். காந்தியோ கடவுள் சொல்வதை மட்டுமே கேட்கிறார்.

—லின் யூடாங்.


# ஈழநாடு
EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி மீ 22 உ (4-6-64)


## நம்பிக்கை சிதைகிறது

இலங்கையில் மொழிப் பிரச்னைக்கு சுமுகமான தீர்வு ஏற்பட்டு தேசிய ஐக்கியம் உருவாகுமென்ற நம்பிக்கை சிதைந்து வருவது நாட்டின் நலனில் அக்கறை கொண்டுள்ளவர்களுக்கு நிச்சயம் வேதனை அளிக்கும்.

உத்தியோக மொழிச்சட்டம் காரணமாக இந்நாட்டிலுள்ள இரு பெரும் முக்கிய சமூகங்களுக்கிடையில் துரதிர்ஷ்டவசமாகத் தோன்றிய மனவேற்றுமை குறைவதற்குப் பதிலாக அதிகரிக்கக் கூடிய முறையிலேயே காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு போவது கவலையளிப்பதாகும். மொழிப் பிரச்னையினால் நாட்டில் ஏற்பட்ட வேற்றுமைகளை நீக்கி சுமுகமான நிலைமையை ஏற்படுத்த பிரதமர் சிலசமயங்களில் எடுத்த சில நடிவடிக்கைகளை பொதுவாகப் பலரும் வரவேற்றிருந்தனர். சென்ற வருடத்தில் திரு. சு. நடேசபிள்ளையையும் மற்றும் பல சுயேச்சை எம். பி. க்களையும் பிரதமர் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது, தமிழரசுக்கட்சியினர் புறக்கணிக்கப்பட்டதையிட்டுக் கவலையடைந்த போதும் நல்லமுடிவு ஏற்பட்டால் போதும் என்று தமிழ்பேசும் மக்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர். மொழிப் பிரச்னையில் சுமுகமான நல்ல தீர்வு கிடைக்குமென்றும் சிறுபான்மையினருக்கு நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கையில், சிம்மாசனப்பிரசங்கத்திற்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை செனட் சபையில் திரு. நடேசபிள்ளை பிரேரித்து பிரதமரைப் பாராட்டிப் பேசினார். சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்டசபைகள் பற்றிக் குறிப்பிடப்பட்ட பொழுது, சிறுபான்மையினரின் பிரச்னைகள் சுமுகமாகத் தீர்வதற்கு வழிபிறந்துவிட்டதாகக் கருதப்பட்டது. ஆனால் மாவட்ட சபை அமைப்பு சம்பந்தமாக ஆராய்ந்த கமிட்டியின் சிபார்சுகள் கூட இன்னும் உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை.

உத்தியோக மொழிச் சட்டம் இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் திகதியிலிருந்து தீவிரமாக அமுலுக்கு வந்தபொழுது அதை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் நேரடி நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்திருந்தனர். இச்சமயத்தில் மொழிப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காணும்பொருட்டு பிரதமர் சர்வகட்சிகளையும் கொண்ட வட்டமேசை மகாநாடு ஒன்று கூட்டப்போவதாகக் கூறப்பட்டது. இதற்கான நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தும்பொருட்டு தமிழரசுக் கட்சி தனது நேரடி நடவடிக்கையை ஒத்தி வைத்து தனது நல்லெண்ணத்தைக்காட்டியது. ஆனால் வட்டமேசை மகாநாடு பற்றிய பேச்சை பின்னர் காணோம். இதற்கு மாறாக உத்தியோக மொழிச் சட்டம் தீவிரமாக அமுல் செய்யப்பட்டுவருவதுடன் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னர் அரசாங்க சேவையில் சேர்ந்த ஊழியர்கள் பலர் கட்டாயமாக அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெறவேண்டுமென உத்தரவு விடப்பட்டுள்ளது. இந்த உத்தரவின்கீழ் அரசாங்கத்தில் 37 வருடம் சேவை செய்த ஒருவர் கட்டாயமாக ஓய்வு பெற்றுள்ளார். இது தவிர தமிழ் ஆசிரியர்களும் தலைமை ஆசிரியர்களாகப் பணியாற்றும் குற்றத்துக்காக உத்தியோக மொழியைப் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது, அரசாங்கத்துடன் தமக்குத் தெரிந்த மொழியில் பொதுமக்கள் தொடர்புகொள்ளலாமென 1961-ம் ஆண்டில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தமிழ்பேசும் பொதுமக்களுக்கு அரசாங்கம் விளக்கிக் கூறிய போதிலும் இன்று உத்தியோக மொழியிலேயே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளவேண்டுமென்று அரசாங்க காரியாலயங்களிலிருந்து வரும்கடிதங்கள் கூறுகின்றன.

தமிழ் பேசும்மக்கள் இந்த நாட்டில் சுதந்திரமாக, இதர சமூகத்தவர்களுக்குரிய உரிமைகளுடன் வாழ வழிகிடைக்கும் என்ற அற்ப நம்பிக்கையும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் சிதறுண்டு போகும் ஆபத்து தோன்றியுள்ளது. தமிழ் பேசும் மக்களுக்கு நம்பிக்கையூட்டி தேசிய ஐக்கியத்தை உருவாக்கிப் பாதுகாக்கும் பொறுப்பு பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவிடம்தான் இன்று உள்ளது. 'ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கைச் சங்கம், மனித உரிமைச் சாஸனம் பற்றிய கருத்தரங்கு ஒன்றை கொழும்பில் இன்று ஆரம்பிக்கும் இச்சமயத்தில், இலங்கையில் மனித உரிமைக்கு எவ்வித மதிப்பளிக்கப் படுகிறதென்பதை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரவேண்டியது கருத்தரங்கில் கலந்து கொள்பவர்களது கடமையாகும்.

மனித உரிமைக்கு மதிப்பளித்து இலங்கையில் உள்ள சிறுபான்மையினத்தவரும் மனிதர் தாம் என்பதையும் கருத்தில் கொண்டு, அவர்களைப் பாதிக்கும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கவேண்டியது பிரதமரினதும் அரசாங்கத்தினதும் தலையாய கடமையாகும். நாட்டின் நன்மையைக் கருதி தமிழ் பேசும் மக்களின் நல்லெண்ணத்தையும் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

# அரசியலிலும் மனிதப்பண்பைப் பேணிய திரு. வி. ஏ. கந்தையா

## இன்றுஅவரது முதலாவது சிரார்த்ததினம்

— ச. அ. சொரத்தினம் —
(செயலாளர், நெடுந்தீவு சமாஜம்)

"பாடையிலே படுத்தூரைச்சுற்றும்போதும் பைந்தமிழில் அழும் ஓசை கேட்க வேண்டும்" என்று கர்ச்சித்த செம்மல் மறைந்து இன்று ஓர் ஆண்டு காலமாகிறது. தமிழ் மொழி, தமிழினம், தமிழ்ப்பண்பாடு ஆகியவற்றின் உயர்வுக்காக தமது கடைசி மூச்சுவரை அல்லும் பகலும் அயராது உழைத்த முத்தமிழ் காவலன் பிரிந்து ஓராண்டு பூர்த்தியாகிறது. நமதுசிந்தனைசக்தி அந்த சுதந்திரவீரரை முன்னிலைப்படுத்துகிறது. கம்பீரமான தோற்றம். புன்னகைசிந்தும் மாமுகம். ஒளி பொருந்திய கண்கள். மனதைக்கவர்ந்து அமிர்தம் பொழியும் வசனங்கள். குமுறும் எரிமலையாக உள்ளந்தான் பொருமிடினும் குளிர்ந்த சாந்தம். எல்லோரையும் அன்பினால் பிணைத்த வள்ளல். இவையெல்லாம் மனத்திரையில் ஓடி மறைகின்றன.



திரு. வி. ஏ. அவர்கள் குழந்தையின் சுபாவம் படைத்தவர். அவர் உள்ளத்தில் வஞ்சகம் முதலான எந்த அபாயக் கருவிகளும் இல்லை. சிறிது பெரிது ஏற்றத் தாழ்வு முதலிய எந்த வித்தியாசங்களையும் அவர் கவனிப்பதேயில்லை. அரசியல் கருத்துவேறுபாடுகள் நிறைந்த இலங்கையில் மனிதப்பண்புக்கு இடமில்லாமல் போய்விடவில்லை என்பதற்கு அவர் ஓர் எடுத்துக்காட்டு. நேர்மையும் உள்ளத்தெளிவும் இலட்சிய வேட்கையும் கொண்ட இந்த சுதந்திர வீரரைப்பற்றி அவருடைய கொடிய அரசியல் எதிரிகளே புகழ்ந்துள்ளனர்.

### பொதுத் தொண்டு

அமரர் கந்தையா அவர்கள் நியாயவாதியாக வாழ்க்கை நடத்தி வருகையில் சமயத் தொண்டனாக பொது வாழ்வில் பிரவேசித்தார். சமயத் தொண்டராக இருந்த கந்தையா அவர்கள் தமிழ்த் தொண்டனாக மாறினார்கள். கொழும்புத் தமிழ்ச்சங்கத்தை ஆரம்பித்தவர்களுள் கந்தையா முக்கியத்துவம் வாய்ந்தவர். கொழும்பு விவேகானந்த சபை, இராமகிருஷ்ண மிஷன் போன்ற பொது ஸ்தாபனங்களில் முக்கிய உறுப்பினராக முன்நின்று உழைத்தார். அவரது ஆழ்ந்த மத மொழிப் பற்றுக்கு எடுத்துக்காட்டாக வேலணையில் நடைபெற்ற திருமுறை விழா சான்று.

### தமிழ்த்தொண்டு

எல்லாம் தமிழ் இயக்கத்தில் மிக ஈடுபட்டு பாராளுமன்றத்தில் கூட தமது பேச்சுக்களை இனிய தமிழில் நிகழ்த்தினர். தனது இலட்சியங்களுக்காக திரிகரண சுத்தியுடன் பேசியும் செயலாற்றியும் வந்தார். தமிழ்ப்பேசும் சமூகம் இலங்கையில் சகல உரிமைகளுடனும் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே அவரது தாரக மந்திரமாக இருந்தது. தமிழ் இளைஞர்களை பேனா முனையை எறிந்து விட்டு ஏர் முனைக்கு வரவேண்டுமெனச் சங்கநாதம் செய்தவர் வீ. ஏ. அவர்கள். தமிழ் மக்கள்பொருளாதார முன்னேற்றம் அடைவதற்காக கமத்தொழில், கைத்தொழில்களில் ஈடுபடவேண்டுமென கைகூப்பி வேண்டி நின்றார். பத்துலட்சம் ரூபா மூலதனத்துடன் மீன்பிடி வள்ளங்கள் வைத்து கடற்தொழிலை விருத்தி செய்ய பலரின் உதவியை நாடிக் கொண்டிருக்கிறேன் என்று கூறிய செம்மல் தமது நினைவு நிறைவேறுமுன் மறைந்து விட்டார்.

### தீவுப்பகுதிகளுக்கு அவரின்சேவை

தமிழ் பேசும் பிரதேசங்களில் தீவுப்பகுதி பொருளாதாரத்திலும் போக்கு வரவு சாதனங்களிலும் மற்றும் கல்வி வசதி முதலியவற்றிலும் பின் தங்கியுள்ளது. தீவுப் பகுதிகளை நீரணைகள் மூலம் இணைத்து இன்றுயாழ்ப்பாணத்தில் இருந்து மோட்டார் வாகனங்கள் மூலம் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு முதலிய இடங்களுக்குப் போகக் கூடிய வசதிகளை அமைத்த பெருமை வி. ஏ. கே. அவர்களைச் சார்ந்தது. இன்னும் தீவுப்பகுதி மக்கள் கடும் வரட்சியான காலங்களில் குடிநீர் கிடையாது, பல வருடங்களாக கஷ்டப்பட்டு இருந்த போது இவர்களின் இன்னல்களை அரசாங்கத்தின் முக்கிய கவனத்திற்குக் கொண்டு வந்து ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினதீவு முதலிய இடங்களுக்கு குழாய் மூலம் குடிநீர் கிடைக்க வசதிசெய்தபெருமை இப்பெருந்தகையைச் சாரும். இன்னும் பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள், கைத்தொழில் முதலியவற்றில் தீவு மக்களுக்கு அளப்பரிய சேவை செய்தார்.

### நெடுந்தீவு! நெடுந்தீவு! என முழங்கியவர்

பாராளு மன்றத்தில் எதற்கெடுத்தாலும் நெடுந்தீவு நெடுந்தீவு எனக்கூறி அத்தீவுக்கு அம்புலன்ஸ் லோஞ்சை ஏற்பாடு செய்தும், வெட்டுகளி என்ற பரந்த குளத்தை கடல்நீர் கலவாது மழைநீர் தேங்க ஐந்து வருடத் திட்டத்தில் வேலைநடக்க அடிகோலி

(5-ம் பக்கம் பார்க்க)

## நாட்டிலும் நகரிலும்

நேர்மைக்கு இன்னும் இடமுண்டு என்பதை நிரூபித்து விட்டார்கள் கொழும்பு வான வெளி மண்டலப் (Observatory) பகுதியினர். நாங்கள் இதுவரை சொல்லிவந்த ஹேஸ்யங்கள் எல்லாம் சுத்தப் பொய்யென்று அவர்கள் அப்பட்டமாக உண்மையை எடுத்துக் கூறிவிட்டார்கள். எவ்வளவு பெருந்தன்மை பாருங்கள்!

முன்பெல்லாம் இலங்கை வானொலியில் கொழும்பு அவதான நிலையத்தின் காலநிலை அறிக்கை, செய்திகள் முடிந்தவுடன் வாசிக்கப்படும். யாழ்ப்பாணத்தில் ஒரு அங்குல மழை, காலியில் கால் அங்குல மழை, மட்டக்களப்பில் மட்டமான மழை என்றெல்லாம் மழை வீழ்ச்சியை அங்குலக் கணக்கில் அளந்து கொடுத்து விட்டு, அடுத்த 24 மணிநேரத்தில் இலங்கையின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளில் இடிமுழக்கத்துடன் கூடிய மழை பெய்யக்கூடும். மற்றப் பகுதிகளில் மழை அவ்வளவாய் இருக்கமாட்டாதென்று வானொலி தெரிவிக்கும். அடுத்த நாள் காலையில் மட்டக்களப்பில் பெரிய வெள்ளம் என்ற செய்தி பத்திரிகைகளில் வெளிவரும்! இலங்கையின் தெற்கு, தென்மேற்குப் பகுதிகளில் அரையே அரைக் கால் அங்குல மழைகூடப் பெய்திராது!

வான வெளிமண்டலப் பகுதியைப் போலவே மற்ற அரசாங்கப் பகுதியினரும் யதார்த்தவாதிகளாகி விட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் இவ்வருடம் எத்தனை கோடி ரூபாய் சூறையாடப்பட்டது; சென்ற மாதம் எத்தனை ஆயிரம் தந்திகள் தபால்மூலம் அனுப்பப்பட்டன; பொலிஸ் இலாகா கடந்த வாரத்தில் எத்தனை கள்ளக்கடத்தல்களைக் கைதவறவிட்டுவிட்டது; இப்படி நெஞ்சத்தைத் திறந்து ஒவ்வொரு இலாகாவும் கூறுமாயிருந்தால் பொதுமக்களுக்கு அவற்றின் மீதுள்ள அபிமானம் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.

தாம் இறந்த பின் தமது அஸ்திகள் இந்தியாவிலுள்ள வயல்வெளிகளெல்லாம் தூவப்படவேண்டுமென்று நேருஜி விரும்பியதாக ஒரு பத்திரிகைச் செய்தி கூறுகின்றது. காந்திஜி அந்தவிதமான விருப்பம் தெரிவித்திருந்தாரோ என்னவோ என்பது ஞாபகமில்லை. ஆயினும் அவருடைய அஸ்திகள் இந்தியாவிலுள்ள கங்கை, யமுனை, காவேரி போன்ற புண்ணிய நதிகளில் மட்டுமல்ல இலங்கை, பர்மா, மலாயா முதலிய இடங்களிலும் கரைக்கப்பட்டன.

கொழும்புக்கு வந்த காந்திஜியின் அஸ்திகள் கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் பொதுமக்களின் வணக்கத்துக்காகச் சில நாட்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சில நாட்களில் அங்கு நடந்த உருக்கமான காட்சிகளைக் கண்டு கலங்காதவர் எவருமில்லை. தோட்டப்பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளிகள் கொழும்புப் பிரயாணத்தை மேற்கொண்டு வந்து அண்ணல் அஸ்திகளின் அடியில் சாஷ்டாங்கமாக விழுந்து புரண்ட காட்சியைக் கண்டவர்களும் கண்கலங்கினர்.

கொழும்பிலிருந்து மகாத்மாவின் அஸ்திகள் கீரிமலை, களனி, கதிர்காமம், மஸ்கேலியா முதலிய இடங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டு அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் கலக்கப்பட்டன. கீரிமலைக்கு வந்த அஸ்திகளை காலஞ்சென்ற கனகரத்தினம்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

ஐயாவும், திருவிளங்கம் ஐயாவும் தலையில் தாங்கிக்கொண்டு புத்தளம் வழியாகக் கால்நடையாகவே யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

களனி நதியில், புத்தபகவான் உபதேசம் செய்த மஹா விஹாரைக்கு அருகில், பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா காந்திஜியின் அஸ்திகளைத் தலையில் சுமந்துகொண்டு வந்து, ஒரு வள்ளத்தில் ஏறி, ஆற்றின் மத்தியில் அவற்றைக் கலக்கச் சென்றபோது, ஆற்றங்கரையில் திரண்டிருந்த லட்சக்கணக்கான மக்கள் நீரில் பாய்ந்துசென்று, அஸ்தியில் ஒரு சிறுதுளியையாவது கண்ணில் ஒற்றிக்கொள்ளப் பட்ட கஷ்டமும், அவர்களை அகற்றிவிட்டு ஆற்றுநீரில் அஸ்திகளைக் கரைப்பதற்குப் பிரதமர் பட்டபாடும், அக்காட்சிகளை விமர்சித்துக்கொண்டிருந்த ஒரு வானொலி விமர்சகர் நாக்குளறி ஒன்றும் பேச முடியாமல் விம்மித் தயங்கியதும் மனதை உருகவைத்த காட்சிகள்.

— வழிப்போக்கன்

# சாஸ்திரி தெரிவுக்கு உலகெங்கும் வரவேற்பு

## ''இந்திரா அழாதேயம்மா''

புதுடில்லி, ஜூன் 3

பிரதம மந்திரி நேருவின் இல்லத்திற்கு குழந்தைகள் எழுதியிருக்கும் ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்திருக்கின்றன, எல்லா வயதுக் குழந்தைகளும் நேரு மாமாவிடம் அன்பைச் சொரிகின்றன.

6 வயதுள்ள கனந்தா, 'அன்புள்ள இந்திரா, தயவு செய்து அழாதேயம்மா, எனக்கு மாமாவை ரொம்பப் பிடிக்கும்" என்று எழுதியுள்ளது.

8 வயதான ஜெயஸ்ரீ "நேரு என்ருல் ரொம்பப் பிடிக்கும். எங்கள் அருமை மாமா அல்லவா? அவரது நினைவாகவே இருக்கிறது. அவர் இல்லாமல் ரொம்ப வெறிச்சோடும்" என்கிருள்.

6 வயதான வந்தனு, "உன் அப்பாவை எனக்கு ரொம்பப் பிடித்து விட்டது. அவர் ரொம்ப நல்லவர். நீ அழாதே. நீ அழுதால் நானும் அழுவேன். உன் அத்தைககும் இதைச் சொல்லு" என்று எழுதியிருககிருள்.

## அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் பாராட்டு

### புதிய மந்திரிசபையில் அதிக மந்திரிகள் இருப்பர்

புதுடில்லி, ஜூன் 3

இந்தியாவின் புதிய பிரதமர் சாஸ்திரி, தேசிய ஒற்றுமை, கடின உழைப்பு முதலியவற்றை வற்புறுத்தியதுடன் நாட்டின் பிரச்சினைகளைப் பயனுள்ள வகையிலும், விரைவாகவும் தீர்க்கவேண்டும் என நிருபர்களிடம் கூறினர்.

திரு. சாஸ்திரி வருகிற 9-ம் திகதி பிரதம மந்திரியாகப் பதவியேற்கவிருக்கிருர். புதிய பிரதமமந்திரியைப் பாராட்டி உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்து ஏராளமான செய்திகள் வந்திருக்கின்றன.

**ஜோன்ஸன்**

அமெரிக்க ஜனதிபதி திரு. லிண்டன் ஜோன்ஸன் அனுப்பியுள்ள செய்தி ஒன்றில், "திரு. நேரு உயிர் வாழ்ந்திருந்தபோது இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே நிலவிய நல்லுறவை நீடிகக சாஸ்திரியுடன் சேர்ந்து பணியாற்ற முடியும்" என நம்புகிறேன் என்று குறிப்பிட்டிருக்கிருர்.

வாஷிங்டன் தேசிய தேவாலயத்தில் திரு. நேருவின் நினைவுக்காக நடைபெறவிருக்கும் பிரார்த்தனையில் தாம் கலந்துகொள்ளபபோவ தாயும் அமெரிக்க ஜனதிபதி அறிவித்திருக்கிருர் இங்கு தான காலஞ்சென்ற கென்னடிக்குப் பிரார்த்தனை நடத்தப் பட்டது.

திரு. சாஸ்திரியின் தெரிவை யூகோஸ்லேவியத் தலைவர்களும் மனமாரவரவேற்றிருக்கிருர்கள்.

நேபாள மந்திரிசபைத் தலைவர் டாக்டர் துளசிகிரி, திரு. சாஸ்திரியின் தெரிவை வரவேற்று, இந்திய நேபாள உறவை வளர்ப்பதில் திரு. சாஸ்திரி வகித்த பெரும் பங்கை நினைவுறுத்திருக்கிருர்.

பிரிட்டிஷ் எதிர்க்கட்சி உப தலைவர் திரு. ஜோர்ஜ பிரௌனும், லிபரல் கட்சித் தலைவரும் சாஸ்திரியின் தெரிவை வரவேற்றிருக்கிருர்கள்.

கென்யா தலைநகர் நைரோபியில் சாஸ்திரியின் தெரிவு நன்கு வரவேற்கப்பட்டது.

தென்னுபிரிக்காவில் டர்பனிலுள்ள பாரத சமூகத்தினர் நேருவுக்குப்பின் சாஸ்திரியே பிரதமர் பதவிக்குத் தக்கவும் பொருத்தமானவர் எனக் கூறி ஆமோதித்திருக்கிருர்கள்.

**நிருபர்களுடன் பேட்டி**

புதியபிரதமர் சாஸ்திரி நேற்று நிருபர்களிடம் பேசினர்.

சாதாரண மக்களின் நிலையை உயர்த்தவும், பொருளாதாரப் பிரச்சினை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை விரைவாகக் கவனிக்கப்போவதாய்க் கூறினர்.

சிறுபான்மையினரின் நலன்கள், சமூக ஒற்றுமை, மொழிப் பிரச்சினை ஆகியவற்றை தேசிய ஒருமைப் பாட்டுடன் கவனிக்க வேண்டும் என்றும் பிரதமர் கூறினர்.

பாதுகாப்பு மந்திரி திரு. சாவனின் அமெரிக்கச் சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாய் முடிந்திருப்பதாகத் தான் கருதுவதாயும் சாஸ்திரி தெரிவித்தார்.

நேருவின் வெளிநாட்டுக் கொள்கை நீடிக்கும் என்றும், கூட்டு சேராமலேயே நேச உறவுகள் தொடர்ந்து நீடிக்கும் என்றும் சாஸ்திரி அறிவித்தார்.

**லாவோஸ்**

லாவோஸ் நிலைமை அபாயகரமாய் இருக்கிறதென்றும், வியண்டியனில் நடைபெறவிருக்கும் தூதர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா தீர்மானித்திருப்பதாயும் சாஸ்திரி கூறினர்.

இரண்டு நாட்களுக்கு முன் பிரிட்டனிடமிருந்தும், ரஷ்யாவிடமிருந்தும் இது சம்பந்தமாகப் பயனுள்ள சில யோசனைகள் தமக்கு வந்திருப்பதாயும், அது தற்போது பாவிக்கப்பட்டு வருவதாயும், சாஸ்திரி தெரிவித்தார்.

ஜெனிவா மகாநாடு அண்மையில் கூடினுலன்றிலாவோஸ் பிரச்சினையைத் தீர்ப்பது கஷ்டமாகி விடும் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார். அந்த நாட்டின் அமைதியைப் பராமரிக்க இந்தியா விரும்புகிறதென்றும், இவ்விஷயத்தில் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஒத்துழைக்க விரும்புவதாயும் சாஸ்திரி அறிவித்தார்.

**மந்திரிசபை விரியும்**

வருகிற 9-ம் திகதி பதவி ஏற்கலாம் என ஜனதிபதி ராதா கிருஷ்ணனிடம் தாம் யோசனை கூறியிருப்பதாக அவர் கூறினர்.

"காமராஜ் திட்டப்படி பதவியிலிருந்து விலகிய தலைவர்களை மந்திரிசபையில் சேர்த்துக் கொள்வீர்களா" என நிருபர்கள் கேட்டனர்.

"இது பற்றி நான் காமராஜருடன் ஆலோசிப்பேன். இந்தியா பிரம்மாண்டமான நாடு. சிறிய மந்திரிசபை அதற்குப் போதாது. ஏராளமான பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. எனவே என் மந்திரி சபையையும் பெரிதாகவே இருக்கும். வருகிற 9-ம் திகதி மந்திரிகள் பதவி ஏற்றபின்பும் அதற்குப் பிறகும் சில மந்திரிகள் பதவி ஏற்கக் கூடும்" என்ருர் சாஸ்திரி.

ஜனதிபதி ராதாகிருஷ்ணன் நேற்று சாஸ்திரியை அழைத்து புதிய மந்திரிசபையை நிறுவுமாறு கேட்டுக் கொண்டார்.

## எட்டேகால் லட்சம் ஆயுதப்படை

புதுடில்லி, ஜூன் 3

நவீன ஆயுதங்களும், சாதனங்களும் கொண்ட எட்டேகால் லட்சம் பேரடங்கிய ஆயுதப்படை ஒன்றை அடுத்த ஐந்தாண்டுகளில் அமைக்க இந்தியா உத்தேசித்திருக்கிறது. விமானப்படையில் 45 ஸ்குவாட்ரன்களை ஏற்படுத்தவும், கடற்படையை பொதுவாக தற்போதைய அளவில் வைத்துக்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மதுரை, ஜூன் 3

நேரு, தாம் காலமாவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் மதுரை பள்ளி விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதியுதவி அளித்தார்.

## ஜோன்சனும், சாஸ்திரியும் திறமையில் சமமானவர்கள்

### அமெரிக்காவில் கருத்து

வாஷிங்டன், ஜூன் 3

நேருவுக்கு வாரிசாக திரு. சாஸ்திரி தெரிந்தெடுக்கப்பட்டது, உலகத்தில் இந்தியாவுக்கு உயர்ந்த அந்தஸ்தத்தை அளித்துள்ள நேருவின் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்படும் என உத்தரவாதம் அளிப்பதாக இருக்கிறதென வாஷிங்டனில் வரவேற்கப்படுகிறது.

திறமையில் திரு. லால்பகதூர் சாஸ்திரி, அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸனுடன் ஒப்பிட்டுப் பேசப்படுகிருர்.

ஜோன்ஸன் போலவேவெளிநாட்டு விவகாரங்களை விட உள்நாட்டுவிவகாரங்களில் திரு. சாஸ்திரி அதிக கவனம்செலுத்துவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. கட்சிக்குள் காணப்படும் முரண்பாடான சக்திகளுடன் ஒத்துப்போகும் குணம் இருவருக்கும் உண்டென்றும், பல்வேறு கோதாவில் இருவரும் அரசாங்கத்துடன் நீண்டகாலத்தொடர்புள்ளவர்கள் என்றும் கூறப்படுகிறது. பிரதமர் பதவிக்கான போட்டி சுமுகமாகவும், சீக்கிரமாகவும் தீர்க்கப்பட்டு விட்டதானது நேருவின் வாரிசுகள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பொறுப்பை உணர்ந்துள்ளனர் என்பதைக் காட்டுவதாக வரவேற்கப்படுகிறது.

## ஜூன் 8-ம் திகதி இந்தியாவில் பொதுவிடுமுறை பிரகடனம்

### அன்று அஸ்திகரைப்பு

புதுடில்லி, ஜூன் 3

நேருவின் அஸ்தி கரைக்கப்படும் ஜூன் 8-ம் திகதி நாடெங்கும் பொது விடுமுறையாகப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுக்கும் திரைப்படக்காரர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை வழங்கப்படவிருக்கிறது.

நேற்று இந்தியாவின் பல தலைநகர்களிலும் நேருஜியின் அஸ்தி கொண்டு வரப்பட்டபோது லட்சக்கணக்கணக்கான மக்கள் அதைத் தரிசனம் செய்தனர்.

சுப்ரீம் வழக்கறிஞர் சங்கம், முன்னுள் ராணுவ ஊழியர் சங்கம், ஆசிய இந்திய ஹரிஜன சங்கம் உட்பட நூற்றுக்கணக்கான ஸ்தாபனங்கள் அனுதாபத் தீர்மானங்கள் இயற்றின.

"நவ யுகத்தின்சிற்பி, காமன்வெல்த் நாடுகளின் ஸ்தாபனத்தைத் தோற்றிவித்தவர்" என பிரிட்டிஷ் உதவி வெளிநாடு மந்திரி திரு. ஜோன் டில்னி நேருவுக்கு பாராட்டுக் கூறினர். இத்தாலி, ஈராக், மற்றும் அரபு நாடுகள், மொரீஷியஸ், அமெரிக்க தொழிலாளர் ஸ்தாபனம் ஆகியவற்றில் நேருவுக்கு புகழ் மாலைகள் சூட்டப்பட்டுவருகின்றன.

## நேருஜியின் கடைசிக் கட்டுரை

புதுடில்லி, ஜூன். 3

சுதந்திரத்திற்குப் பிறகு நாட்டின் அபிவிருத்தி மிக மெத்தனமாகவே இருந்துவந்துள்ளது என்ற கருத்தை நேரு ஏற்கவில்லை. ஏற்பட்டுள்ள அபிவிருத்தி கணிசமானது என்பது அவர் கருத்து.

"இந்திய வளர்ச்சித் திட்டத்தில் சோஷலிஸம்" என்ற தலைப்புடன் 'திட்டக் கமிஷன் மெம்பர் ஸ்ரீமந் நாராயணன் எழுதியுள்ள ஒரு நூலுக்கு மே 25-ம் திகதி நேருஜி ஒரு முன்னுரை எழுதினர். இது தான் அவர் தம் வாழ்நாளில் இறுதியாக வெளியிட்ட அபிப்பிராயம் எனக் கருதப்படுகிறது.

## சீனப்படை குவிப்பு அதிகரிக்கிறது

### 'பயனுள்ளபேச்சில் சீனவுக்கு அக்கறை இல்லை' — சாஸ்திரி

புதுடில்லி, ஜூன் 3

கொழும்புப் பிரேரணைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பீக்கிங்கிலிருந்து வரும் அறிக்கைகள் ஊக்கம்தருவதாக இல்லையென திரு. சாஸ்திரி லோக சபையில் தெரிவித்தார்.

சமீபத்தில் நவசீனச் செய்தி ஸ்தாபனம் வெளியிட்ட அறிக்கை சீன அரசாங்கத்தின் நிலையைக் கணிசமாகப் பிரதிபலிக்கும்பட்சத்தில் கொழும்புப்பிரேரணைகளை ஏற்பதிலோ அல்லது இந்தியாவுடன் தற்போது நேடிரப்பேச்சு நடத்துவதிலோ சீன அக்கறை கொண்டிருக்கவில்லை எனத் தெரிவதாகச் சாஸ்திரி தெரிவித்தார்.

நேரு மறைவுக்குப் பின் சீனரின் போக்கில் சாதகமான அல்லது பாதகமான மாறுதல் அறிகுறிகள் ஏதாவது உள்ளனவாவென எச். பி. காமத் கேட்டார். சீனரின் போக்கு மிகக் கடுமையாக இருக்கும் அறிகுறிகள் காணப்படுமானல் நிலவரத்தைச் சமாளிக்க அரசாங்கம் தயாராகவுள்ளதா எனவும் அவர் கேட்டார்.

ஸ்ரீமதி லட்சுமி மேனன் இதற்குப் பதிலளிக்க மறுத்துவிட்டார்.

உருப்படியாக எதுவும் இல்லையென்றும், இந்தியாவின்நிலை முன்பு போன்றதேயென்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

எல்லையில் சீனப் படைக் குவிப்பும், பாகிஸ்தான் நடவடிக்கைகளும் நீடிப்பதாயும், எல்லைகளைக் காக்கச் சாத்தியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருப்பதாயும் பாதுகாப்பு மந்திரி சவான் கூறினர்.

எல்லையில் சீனப் படைக் குறைப்பு நீடிக்கிறது. 1962 நவம்பரில் இருந்ததைவிட இப்பொழுது அது அதிகம். குறிப்பாக காஷ்மீரிலும், அஸ்ஸாமிலும், திரிபுராவிலும் பாகிஸ்தான் நடவடிக்கைகள் நீடிக்கின்றன என்றும் சவான் கூறினர்.

## "இனி அரசாங்கத்தை அதிகம்கண்டிப்பேன்"

### ராஜாஜி அறிவிப்பு

புதுடில்லி, ஜூன். 3

"நல்ல புத்திமதிக்குச் செவிசாய்க்கவும், நல்லது கெட்டது அறிந்து நடந்து கொள்வதற்கும் புதிய பிரதமருக்கும் அவருடைய சகாக்களுக்கும் அறிவு தருமாறு இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்" என ராஜாஜி கூறினர்.

"நேருஜி இறந்துவிட்டார். புதிய அரசாங்கம் தவருன கொள்கைகளைப் பின்பற்றினுல் அவற்றைக் கண்டிக்காமல்விட மாட்டேன். இப்போதிலிருந்து இனி நான் மேலும் தைரியமாகவும் உறுதியாகவும் அரசாங்கத்தை கண்டிப்பேன்" என்றும் அவர் கூறினர்.

"45 ஆண்டுகளுக்கு அதிகமாக நேருவுடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவருடைய தந்தையை நான் நன்கு அறிவேன். ஆகவே நேருவிடம் எனக்கு மிகுந்த பிரியமும், அன்பும் உண்டு. மோதிலால் நேரு தனது புதல்வர் பெருந்தலைவராக வேண்டும் என விரும்பினர். அவருடைய ஆசையை எதிர்பார்த்ததை விட வெகு அதிகமாகவே நேருஜி பூர்த்தி செய்துவிட்டார்" என்றும் ராஜாஜி கூறினர்.

# பங்கீட்டரிசிப் புத்தகம் பெறுவதில் மோசடி!

யாழ்ப்பாணம், புதன்

ஒவ்வொரு கிராம சேவகர் பகுதியிலும், 22-வது தொடர்ச்சி கூப்பனுக்காக வீட்டுச் சொந்தக்காரர் பத்திரத்தில், பதியப்படும் பெயர்களில் சில மோசடிகள் நடப்பதாகவும், இந்த மோசடியை கண்டுபிடிப்பதற்காக பரிசோதகர்கள் வண்ணார்பண்ணை,தென் கிழக்கு, வடக்கு-கிழக்கு பகுதிகளிலும் சோதனை செய்துவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இறந்தவர்கள், இரு இடங்களில் கூப்பன் உள்ளவர்கள், வேறு பெயரில் கூப்பன் உள்ளவர்கள் ஆகியவர்களின்பெயர்களும் புதிய கூப்பனுக்கான பத்திரத்தில் பதியப்படுவதாகவும் இதைக் கண்டுபிடிப்பதில் பரிசோதகர்கள் அதிக அக்கறை எடுத்துவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குற்றச் சாட்டுக்கள் நிருபிக்கப்பட்டால் 500 ரூபா அபராதம், அல்லது ஆறுமாதகடூழியச் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படுமெனவும் கூறப்பட்டுள்ளது.

# மூன்றுவது அபிவிருத்தித்திட்டம் உருப் பெறவில்லை!

கொழும்பு புதன்

அடுத்த மூன்றுவருடத்திட்டத்தில் செய்யப்பட வேண்டிய அபிவிருத்திகள் பற்றிய குறிப்புக்களை தேசிய திட்டஅமைப்பு நிருவாகிக்கு இதுவரை சமர்ப்பிக்கத் தவறியதர்காக பல்வேறு அமைச்சக்களுக்கும், காலதாமதம் செய்யாது குறிப்புக்களை வழங்குமாறு சோரும் கடிதங்கள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் அனுப்பப்பட்டுள்ளன.

அபிவிருத்தித் திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட ஓவ்வொரு அமைச்சையும், அவர்களால் நியமிக்கப்பட்ட திட்டக்கமிட்டி எவ்வாறு வேலை செய்துவருகிறது என்பதை ஆராயவேண்டும் என்றும் பிரதமர் தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

“தேசியத் திட்ட அமைப்பு நிருவாகியை அடுத்த மூன்று ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிக்குமாறு கோரியுள்ளேன். அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பொறுப்பான பல்வேறு பிரிவுகளிலிருந்தும் இத்திட்ட அமைப்புக்கு அடிப்படைத் தேவையான தகவல்களைப் பெறுவதிலேயே பெரிதும் இடர்ப்பாடுநேருகின்றது. பல்வேறு அமைச்சகளும் அதிகாரிகளும் சற்றே உற்சாகத்துடன் தமது ஒத்துழைப்பை நல்க முன்வருவராயின் மூன்றுவது திட்ட அமைப்பு வேலைகள் சுமுகமாக நடந்தேறி விடும். 64—65 ஆண்டுக்குரிய நிதி மசோதாவைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது மூன்றுவது தேசிய அபிவிருத்தித் திட்டமும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆதலால் வேண்டிய ஒத்துழைப்பை நல்குமாறு இத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அமைச்சர்களை வேண்டுகிறேன்” என்றும் அக்கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## பெரிய புராணப் படிப்பு பூர்த்தியாகிறது

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு மேற்கு அரியநாயன் புலம் விநாயகர் ஆலயத்தில் கடந்தமூன்றுமாதகாலமாக திரு. சி. கணபதிப்பிள்ளை படித்துவந்த பெரிய புராணப் படிப்பு மகேஸ்வர பூசையுடன் இம்மாதம் 24-ம் தேதி முடிகிறது.

## “நாளுக்கு 8 மணியானல் கிழமைக்கு 40 மணி”

கொழும்பு, புதன்

அரசாங்க காரியாலயங்களில் மேலதிக நேர வேலை முறையை நீக்கி 8 மணித்தியால வேலைத்திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டு வருவது பற்றி ஆராய்ந்துவரும் கமிட்டி ஒன்றிடம் அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில் தாங்கள் 8 மணி நேரவேலையை ஆதரிப்பதாகவும் ஆனல் கிழமைக்கு 40 மணி நேரமே வேலை வாங்கப்படவேண்டும் என்று கருதுவதாகவும் கூறியுள்ளது.

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத தலைவர் திரு. டி. பி. திஸநாயக்கா 8 மணித்தியால வேலைத்திட்டம் அமுல் செய்யப்பட்டால் 5 நாட்களே வேலை வாங்கப்பட வேண்டுமென்றும் 2 நாட்கள் ஓய்வு வழங்கப்படவேண்டும் என்றும் உடல், உள ஓய்வு பெற இது அவசியமென்றும் அடுத்த கிழமையில் புத்துணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் வேலை செய்ய இது உதவும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.





ரெமி பொரேட்டட் டல்கம் பவுடர்

ரெமி பவுடரைப் பாவித்திருக்கிறீர்களா? சிறந்த பவுடருக்கு இணையான இந்த உயர்ந்த பவுடர் - வெகு நியாயமான விலைகளில் கிடைக்கும. அதி உன்னத மூலப் பொருட்களினுல் ஆக்கப்பட்ட ரெமி மிக லளிதமாக வாசனையூட்டப்பட்டுள்ளது. உங்கள் வியாபாரிகளிடத்தில் 2 சைஸ் டின்களில் கிடைக்கும்.

ஆவ்ரா அன் கம்பனி,
19, செட்டியார் தெரு, கொழும்பு.
போன்: 7211, 7212


கந்தசாமி தினத்தன்று

## திறைசேரியின் கடும் நடவடிக்கை

கொழும்பு, புதன்

கந்தசாமி தினத்தன்று ஊர்வலங்களோ கூட்டங்களோ வைப்பதற்கு அனுமதி கொடுக்க திறைசேரிமறுத்துவிட்டது. அலுவலகங்களில் இரண்டுநிமிடம் மௌனம் அனுட்டிப்பதற்கு மட்டும் அனுமதி கொடுத்திருக்கிறது.

வழக்கம்போல அலுவலக வேலைகள் நடப்பது போல அமைதியாக வேலைகள் கவனிக்கப்பட வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1947-ம் ஆண்டு அரசாங்க சேவையாளர் வேலைநிறுத்தம் செய்தபோது கந்தசாமி அங்கு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின்போது குண்டுபட்டு மரணமடைந்தார்.

## “சேவைக்கு லொறி தேவை”

கொழும்பு, புதன்

“உணவு, கூட்டுறவு அமைச்சு, கூட்டுறவு நிலையங்கள் லொறி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவேண்டும்” என்று சிபார்சு செய்து ஓராண்டு முடிந்துவிட்டது. ஆனல் இறக்குமதி ‘லைசென்ஸ்’ இன்னமும் வழங்கப்படவில்லை.

தற்போது கூட்டுறவுப்பகுதியில் 475 லொறிகள் உள்ளன. இவற்றில் பல மிகவும் மோசமான நிலையில் உள்ளன. ஆதலால் சேவைக்கு உபயோகப்படுவதில்லை. இறக்குமதிக் கட்டுப்பாட்டின் விளைவாக உதிரிப் பாகங்களின் விலை ஏறியிருப்பதால் இவற்றைப் பழுதுபார்க்கவும் முடியவில்லை என்று கூட்டுறவுப்பகுதி அதிகாரியொருவர் கருத்துத் தெரிவித்தார். ஏற்கனவே 39 லொறி ‘ஸைவி’ இறக்குமதி செய்யப்பட்டுள்ளனவென்றும் இவை போதியனவல்லவென்றும் கூறப்படுகிறது.

## உலக நாடுகளில் மொழிப்பிரச்னை

### பஹாய் இயக்கம் அக்கறை

உடுப்பிட்டி, புதன்

“உலக சமாதானம் ஓங்க வேண்டுமானல் மனிதகுலத்தின் ஒருமைப்பாடு அவசியம். ஏழையென்றும் பணக்காரனென்றும் பாராமல் சூரியன் எவ்வாறு சமமான ஒளியைத் தருகிருனே அதேபோலவே உலக பஹாய் இயக்கமும் ஒளியைக் கொடுக்கும் ஒரு சூரியனுகத் திகழ்கிறது. உலக நாடுகளின் மொழிப்பிரச்னைகளை இலகுவில் தீர்த்துவைக்க பஹாய் இயக்கம் முயன்றுவருகிறது. தாய்மொழியுடன் இன்னேர் உலகப் பொதுமொழியையும் பயில்வதன் மூலம் எந்த நாட்டவரும் தம் நாட்டில் தாய்மொழியையும் அயல் நாடுகளில் உலக பொதுமொழியையும் உபயோகிக்கலாம்.”

கரவெட்டிமேற்கு உச்சில்குளத் திற்கருகாமையில் நடைபெற்ற பஹாய் இயக்கக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த அமெரிக்க இரசாயனவியல் விற்பன்னரும் உலக பஹாய் இயக்கத் தூதுவருமான திரு. சலோனர் குட் மேற்கண்டவாறு பேசினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், “செயற்கைக் காட்சிகள் மலிந்த அமெரிக்க இடங்களிலும் பார்க்க இந்நாட்டின் குளமும் அதனருகே கோவிலும் சுற்றரை வயல்வெளியும் அமைந்த இயற்கைக் காட்சிகள் தமது மனத்தை மிகவும் ஈர்க்கின்றனவென்றும் குறிப்பிட்டார். திரு கே. டி. ஜே. இரத்தினம், திரு. கே. சிவஞானசுந்தரம், திரு. வி. பாலசிங்கம் ஆகியோரும் பேசினர்.

இதன் பின்னர் நெல்லியடி, வதிரி இரும்பு மதகடி, வதிரி முருகையன் கோவிலடி ஆகிய இடங்களிலும் பஹாய் இயக்கப் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இதன் பின்னர் அராலியிலும் இரு இடங்களில் பஹாய் இயக்கக் கூட்டங்கள் நடைபெற்றன.

திரு சலோனர்குட் கொழும்பு திரும்புமுன்னர் புங்குடுதீவு, நயினதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார்.

# “நேருவின் இலட்சியங்களை நாம் பயன்படுத்த வேண்டும்”

உடுப்பிட்டி, புதன்

“மகாபாரத காலத்திற்குப் பின் பாரதத்தாய் ஈன்றெடுத்த தவப்புதல்வன் நேரு. அவரது பூதவுடல் பிரிந்ததேயன்றி புகழுடல் அழியவில்லை. அவரது லட்சியங்களை எமது அரசியல்வாழ்வில் பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும்.”

பாரதப் பிரதமர் நேருவின் மறைவையொட்டி நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் நடைபெற்ற அனுதாபக கூட்டத்திற்குத் தலைமை வகித்த நெல்லியடி பட்டின சபைத் தலைவர் திரு. வே. சு பொன்னையா மேற்கண்டவாறு பேசினர்.

திரு. எஸ். கணேசமூர்த்தி பேசுகையில், சிறு வயதில் தனது வீட்டுக் கண்ணடி பல்புகளுக்குக் கல்லெறிந்து குறிபார்க்குமளவிற்குப் பணக்காரரான நேரு காலப்போக்கில் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் நாட்டிற்காக அர்ப்பணித்துவிட்டார் என்று கூறினர்.

திரு. க. பேரம்பலமும் பேசினர்.

அத்துளுவட்டார அங்கத்தவர் திரு. எஸ். தாமோதரம்பிள்ளை, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர் வித்துவான் ஆறுமுகம், திரு. கந்தையா, திரு. ஜே. செல்வநாயகம் ஆகியோரும் பேசினர்.

நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவரான திரு. க. ஞானசுப்பிரமணியம் நன்றியுரை கூறினர்.

கூட்ட ஆரம்பத்தில் பிரதமர் நேருவின் உருவப்படம் நெல்லியடி மஹாத்மா தியேட்டரிலிருந்து முருகமூர்த்தி ஆலயம்வரை மௌன ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது.

### கரணவாயில் அனுதாபக் கூட்டம்

“உலக சமாதானமே தனது குறிக்கோள் என்று உலக ஒற்றுமைக்காக அயராது உழைத்த பாரதப் பிரதமரின் திடீர் மறைவு இந்தியாவுக்கு மட்டுமல்ல உலக நாடுகளுக்கும் பெருத்த நஷ்டமாகும். உலகில் சுடர்விட்டுப் பிரகாசித்த ஆசியஜோதி அணைந்துவிட்டது.

பாரதப் பிரதமரின் மறைவு எம்மைப் பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது. எமது ஆழ்ந்த அனுதாபத்தைப் பாரதமக்களுடன் பகிர்ந்து கொள்கிறேரும்.”

இவ்வாறு கரணவாய் கலா படிப்பக மன்றக் காரியதரிசி திரு. ஜே. ஜெயக்குமார் இந்தியதூதர் திரு. பி. கே. கபூருக்கு அனுப்பியுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அனுதாபக்கூட்டம் நிலைய மண்டபத்தில் திரு. ஐ. சிவகுரு தலைமையில் நடைபெற்றது, தலைவர் தனது உரையில், “நேருவைப் போன்ற ஒரு சமாதானப் புருஷரை இனிநாம் காண முடியாது” எனக் கூறினர்.

திரு. எம். எஸ். யேசுதாசன், திரு. க. நீலகண்டன், திரு. ஜே. ஜெயகிருமார் ஆகியோரும் பேசினர்.

கூட்ட ஆரம்பத்தில் 2 நிமிட மௌனம் அநுட்டிக்கப்பட்டது.

## பிலிப் ஒருசிறந்ததலைவர்

### மகாநாயக தேரோ பாராட்டு

நாவலப்பிட்டி, புதன்

‘திரு. பிலிப் குணவர்த்தன இந்த நாட்டிலுள்ள சிறந்த தலைவர்களுள் ஒருவர்’’ என வண. சுவில்வரசங்ந மகாநாயகதேரோ நவலப்பிட்டியிலுள்ள அநுருதா கல்லூரியில் நடைபெற்ற லங்கா சோவியத் நட்புறவுச் சங்க ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

திரு. பிலிப் குணவர்த்தன சகல மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நேர்மைமிக்க தலைவருக்கு ஓர் எடுத்துக் காட்டானவர், இவர் போன்றவர்கள் இருப்பது இந்த நாட்டுக்கு ஒரு வரப்பிரசாதம்.

இலங்கையிலுள்ள அதிகமான அரசியல் வாதிகள் தாமொன்றை செய்துகொண்டு மற்றவர்களை வேறென்றைச் செய்யுமாறு கூறுகின்றுர்கள். ஒழுக்கம், மது ஒழிப்பு இவை பற்றி அரசியல்வாதிகள் பேசுகின்றனர். ஆனல் தாம் இவற்றில் தவறிவிடுகிருர்கள்.

இங்குள்ளவர்கள் குமாஸ்தாவாகவோ ஆசிரியராகவோ அல்லது மந்திரியாகவோ வரவே விரும்புகிருர்கள். மேல் நாடுகளிலிருந்து தேவையற்ற பழக்கவழக்கங்களைப் பின்பற்றும்நமது இளைஞர்களால் நமது நாட்டுக்கு பெரும் தீங்கு விளையும். இந்த நிலைமை மாற வேண்டும்.

## மனித உரிமை மகாநாடு

கொழும்பு, புதன்

இலங்கை ஐ. நா. சங்கத்தின ஆதரவில் மனித உரிமைகள் பற்றிய நான்கு நாள் மகாநாடு நாளை றேயல் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமாகும்.

நாளை மாலை 5 மணிக்கு ஆரமபமாகும் இம்மகாநாட்டை இலங்கை ஐ நா. சங்கத் தலைவர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமா ஆரம்பித்து வைப்பார். நீதியரசர் சி. எஸ். பெர்னுண்டோ பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்வார்.

வெள்ளிக்கிழமை தொடக்கம் காலையும் மாலையும் நிகழ்ச்சிகள் நடைபெறும். வெள்ளிக்கிழமை காலை திரு. எச். டபிள்யு. ஜெயவர்த்தனவும், மாலையில் திரு. கே. சோமசுந்தரமும் முககிய பேச்சாளராகக கலந்துகொள்வார்கள். சனிக்கிழமை காலை திரு. வில்மட் ஏ. பெரேராவும், மாலையில் திரு. வி. எப். அமரசிங்காவும் முக்கிய பேச்சாளராகக் கலந்து கொள்வர். ஞாயிற்றுக்கிழமை காலை அமெரிக்க தகவல் பகுதி டைரக்டரும், மாலையில் ஐ. நா. சங்கத்தின் மனித உரிமைப் பிரிவின் டைரக்டர் டாக்டர் ஜோன் பி. ஹம்பிறியும் சொற்பொழிவாற்றுவர். அன்றைய தினம் ஐ. நா. சங்கப்போட்டிகளில் பரிசு பெற்றோருக்கு சபாநாயகர் திரு. ஹியுபெர்னுண்டோ பரிசு வழங்குவார்.

## நாகபூஷணி அம்மாள் மகோற்சவம்

புங்குடுதீவு, புதன்

நயனதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் கொடியேற்றம் இம்மாதம் 10-6-64ல் தொடங்கி மகோற்சவம் 24-6-64ல் முடிவடையும். திருவிழாக்காலங்களில் யாத்திரிகர்களுக்கு பிரயாண வசதியும் மற்றும் இலவச பால் விநியோகமும் செய்யப்படும். சமய பிரசாரமும் நிகழும்.

## நாட்டிய சங்கம் அனுதாபம்

கொழும்பு, புதன்

இந்தியாவின் தலைசிறந்த புதல்வனும் உலக மேதையுமான நேருஜியின் மறைவு எதிர்காலத்தில் நிரப்ப முடியாத மாபெரும் நஷ்டமென்றும், அவர் இந்தியாவில் நடனம், சங்கீதம், நாடகம் ஆகிய கலைகள் வளருவதற்கு வழி கோலியவர் என்றும், இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் அவரின் மறைவுக்கு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறதென்று இலங்கை சங்கீத நாட்டிய சங்கம் பாரதப் பிரதமரின் மறைவு குறித்து அனுப்பிய அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறது.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 4-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் கழகம், 5-45 திரை இசை, 6-10 விலைவாசிகள், 5-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட், 7-00 பேச்சு "நாடும் நாமும்", 7-15 நேயர் விருப்பம், 7-45 தொடர் நாடகம்: "மட்டக்களப்பு மாப்பிள்ளை", 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 கவிக்கோவை, 9-30 தேர்ந்த இசை, 10-00 ஒலிப்பதிவுகள்.


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Peter Cushing
IN
Cash on Demand
(Suspense - Action Film)


சதிவழக்கு விசாரணை

# 'எந்த விதத்திலும் சிறையிலிருந்து வெளியேற விரும்பினேன்'

## திரு. அல்விஸ் தொடர்ந்து சாட்சியம்

கொழும்பு, புதன்

எனது தேகநிலைபற்றி நான் எனது வழக்கறிஞருக்குத் தெரிவித்து சிறையுள்ளேயே எனது நிலை மோசமடையலாமென நான் அச்சம் கொண்டிருப்பதாக அவருக்கு எடுத்துக் கூறினேன்.

புரட்சிசதி வழக்கு விசாரணை கேற்று தொடர்ந்து நடைபெற்றபோது லெப்டினன்ட் கேணல் டி அல்விஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதிகமான எதிரிகள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆரம்பத்தில்குறுக்கு விசாரணை செய்தபோது ஆலோசனைக் கமிட்டியிடம் தமது வழக்கறிஞர் திரு. மோரியஸ் பெர்னண்டோ விஷயங்களை எடுத்துரைத்தார், எனக் கூறினர்.

வழக்கறிஞர்: நீர் இறந்து போவீரென அச்சம் கொண்டிருப்பதாக தெரிவித்திருந்தீரா?

சாட்சி: அப்படித்தான் தெரிவித்திருந்ததாக ஞாபகம்.

வழ: உமக்கு ஞாபகசக்தி எந்தநிலையிலிருந்தது.

சாட்சி: ஞாபகசக்தி குறைவாகவே இருந்தது.

வழ: உமக்கு நித்திரை குறைவு என்பதுபற்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்திருந்தீரா?

சாட்சி: ஆம். நான் அவர்களிடம் இதுபற்றிக் கூறியிருந்தேன். நித்திரை மாத்திரைகள் பயனற்றுப் போய்விட்டதாகவும் நான் இருந்த சூழ்நிலையைவிட்டு விடுவிக்கப்பட வேண்டுமென்றும் நான் தெரிவித்தேன். இதன்பின் ஓரிரு நாட்களுக்குப் பின்னர் இரகசிய பொலிஸார்முன் அழைத்துச் செல்லப்பட்டேன்.

சிறையிலிருந்து நான் ஆலோசனைக் கமிட்டிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்.

வழ: எதற்காக இக்கடிதம் அனுப்பினீர்?

சாட்சி: எந்தவிதத்திலும் சிறையிலிருந்து வெளியேறவே நான் விரும்பினேன். இதுவே எனது முதல் எண்ணமாக இருந்தது.

வழ: 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதியன்று ஆயத்தமாக இருக்கும்படி நீர் உமது படைப் பிரிவினருக்கு உத்தரவிட்டீரா?

சாட்சி: ஆம்.

வழ: அன்று உமது பிரிவினர் தயாராக இருந்தனரா?

சாட்சி: ஆம்.

வழ: அதுமாதிரியான உத்தரவு 27-ம் திகதியன்றும் பிறப்பிக்கப்பட்டதா?

சாட்சி: ஆம்.

வழ: 27-ம் திகதியன்று உமது துருப்பினருக்கு ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டதா?

சாட்சி: இல்லை.

வழ: எலிபாங்க் ரோட்டிலுள்ள ஜேசுதாசனின் வீட்டில் குழுமியிருந்தவர்களுக்கு தாங்கள் ஏன் அங்கே அழைக்கப்பட்டார்கள் என்பது தெரியுமா?

சாட்சி: தெரியாது என்று தான் நினைத்தேன்.

வழ: அங்கே யாருக்கும் ஏதாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டதா?

சாட்சி: கின்ரொஸ்அவென்யூவில் மீண்டும் கூட வேண்டும் என்பதைத் தவிர வேறொரு கட்டளையும் பிறப்பிக்கப்படவில்லை.

வழ: கப்டன் பீலிக்ஸுக்கு ஏதாவது பணி கொடுக்கப்பட்டதா?

சாட்சி: இல்லை.

வழ: திரு. சிட்னி டி' சொய்சா பற்றி கப்டன் பீலிக்ஸுக்கு ஏதும் கூறப்பட்டதா?

சாட்சி: இல்லை. நான் அறியக்கூடியதாக ஒன்றும் கூறப்படவில்லை.

வழ: கேணல் அபயசிங்கா திரு. சிட்னி டி' சொய்சாவை பற்றிக் குறிப்பிட்டாரா?

சாட்சி: இல்லை.

வழ: கின்ரொஸ் அவென்யூ கூட்டத்தில் நீர் மேஜர்யோசப்புடனும் மேஜர் ராஜபக்சாவுடனும் இருந்தீரா?

சாட்சி: ஆம்.

வழ: மேஜர் ராஜபக்ச ஏதாவது சொன்னரா?

சாட்சி: தனது பதவிஉயர்வு பற்றிப் பேசினர். கேர்ணல் உடுகம 'கரையோர நாய்களுக்கு பதவிஉயர்வு கிடைக்காது" என்பது கூறியதாகவும் கூறினர்.

வழ: கேணல் சேரம் வந்ததும் "ஏதோ பிழைத்துவிட்டதுபோல் தெரிகிறது" என்று சொன்னரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: ஏதாவது உத்தரவுகள் கொடுக்கப்பட்டதா?

சாட்சி: இல்லை. விவாதம் மட்டுமே நடைபெற்றது. தேவை ஏற்படின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட கோஷ்டியை அழைத்து உத்தரவுகள் கொடுப்பதுபற்றிப் பேசப்பட்டது.

வழ: கவர்னர் ஜெனரலைப் பற்றி ஏதாவது பேசப்பட்டதா?

சாட்சி: இல்லை.

வழ: இராணி மாளிகை பற்றிப் பேசப்பட்டதா?

சாட்சி: இராணிமாளிகையைப் பாதுகாப்பதுபற்றிப் பேசப்பட்டது.

திரு. ஆர். கன்னங்கராகுறுக்கு விசாரணை செய்தபோது லெப்டினன்ட் கேணல் அல்விஸ் தெரிவித்ததாவது:

ஒருநாள் சிறைச்சாலை அதிகாரிகள் எங்களைத் துப்பறியும் பகுதிக்கு அழைத்துச் சென்றனர். அங்கே திரு. நிரல் குணதிலகாவும் திரு. அம்பலவாணரும் இருந்தனர். 'உமக்கு மன்னிப்பு அளிக்க முடிவு செய்துள்ளோம். இந்தப் பத்திரத்தை வாசித்துவிட்டு கையெழுத்துப்போடும்" என்று சொன்னர்கள். அப்படியே செய்தேன்.

அடுத்த சாட்சியாகப் பொலிஸ் சுப்ரின்டன் திரு. சி. செனிவிரத்ன அழைக்கப்பட்டார்.

திரு. சி. செனிவிரத்ன தமது சாட்சியத்தில் கூறியதாவது:

1962-ம் ஆண்டு ஜனவரி 27-ம் திகதியன்று மாலை 6 மணிக்கு நடந்த மகாநாட்டில் திரு. சி. சி. திஸநாயக்கா கலந்து கொண்டார். கொழும்பு மாவட்டப் பொலிஸ் அதிகாரிகள் இம்மகாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இம் மகாநாட்டிலிருந்து என்னை திரு. திஸநாயகா வெளியே அனுப்பிவிட்டார். நான் வீட்டுக்குப் போனேன்.

இரவு 11 மணியளவில் திரு. ஜீரசிங்கா என் வீட்டுக்கு வந்தார்.

திரு. ஸ்டான்லி சேனநாயகா அதிகம் குடித்துவிட்டதாகவும் அவரைப் பார்க்குமாறும் சொன்னர். அதன்படியே நான் திரு. ஸ்டான்லியிடம் சென்றபோது அவர் படுத்திருந்தார். அவரை எழுப்பி உடையை மாற்றச் செய்து அவருடன் இருந்தேன்.

நான் அங்கிருந்தபோது சிலர் நடக்கும் காலடியோசை கேட்டது. நான் சென்று பார்த்தபோது திரு. ஜீரசிங்கா, திரு. ரெரிவிஜயசிங்கா, திரு. ஜோன்பிள்ளை ஆகியோரைக் கண்டேன். 'திட்டம் கைவிடப்பட்டுவிட்டது' என்று அவர்கள் சொன்னர்கள்.

திரு. ஆர். ஏ. கன்னங்கராகுறுக்கு விசாரணை செய்தபோது 1962-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் திரு.ஸ்டான்லி சேனநாயகா அலரிமாளிகையில் நடந்த மகாநாடுகளில் கலந்து கொண்டாரா எனக் கேட்டார்.

திரு. செனிவரத்ன: ஓரிரு தடவைகள் அலரி மாளிகைக்கு அவர் சென்ருர் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

வழ: இடதுசாரித் தலைவர்களினதும் தொழிற்சங்கத் தலைவர்களினதும் விலாசம் நடமாட்டம் போன்ற விபரங்களைப் பொலிஸார் திரட்டினரா?

சாட்சி: ஆம்.

அடுத்த சாட்சியாக பொலிஸ் கான்ஸ்டபிள் ஜி. கே. பி.முனசிங்கா அழைக்கப்பட்டார்.

---

## கொலை வழக்கில் மாணவன் கைது

கொழும்பு, புதன்

தொழிலாளி ஒருவரைக் குத்திக்கொலைசெய்தது சம்பந்தமாக தெரணியகலையிலுள்ள பாடசாலை ஒன்றில் பயிலும் 18 வயது மாணவனும் 20 வயதுடைய மற்றுமொரு இளைஞரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

---

## வி. ஏ. கந்தையா....

(2-ம் பககத் தொடர்ச்சி)

இன்னும் பல முன்னேற்றங்களையும் செய்து வைத்தார்.

### கந்தையா பாலம்

பிரயாணக் கஷ்டத்தினுல் தாங்கொணுத இன்னல்கள் பல அனுபவித்துவரும் நெடுந்தீவு மக்கள் இன்னும் சில மாதங்களுக்குள் குறிகாட்டுவான் பாலம் பூரணமானதும் அரைமணிநேரத்தில் புங்குடுதீவை வந்தடையக் கூடிய ஓர் ஒப்பற்ற வசதியை உருவாக்கித் தந்தவரும் இவரே.

தமிழ்பேசும் மக்களுக்குள் ஒற்றுமையையும் சமத்துவத்தையும் நிலைநாட்ட பெரும் பணிபுரிந்த இப்பெரியார் நாமம் தமிழ் கூறும் நல்லுலகம் உள்ளளவும் வாழும்.


இப்பொழுது திரையிடப்படுகிறது !
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30
ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) ஜூப்பிட்டர் (குருணகலை) தாஜ்மஹால் (கல்முனை)
எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்
நானும் ஒரு பெண்
இந்திய ஜனுதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.


## யாழ்ப்பாண மாநகரசபை

### அறிவிப்பு

யாழ்ப்பாண மின்சார நிலையத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் இடையிலுள்ள மின்சார நிலைய குறுக்கு வீதி வாகனப் போக்குவரத்துக்குமுடப்பட்டிருப்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கிறோம்.

ஒப்பம்:
டி. டி. ஜெயசிங்கா,
மாநகரசபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்,

1-6-64 387

---

### அறிவித்தல்

நிகழும் ஆனித்திங்கள் 5ஆம் நாள் (5-6-64) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் கலாசாலைத் தமிழ்க் கழகத்தினரால் "திருவள்ளுவர் திருநாள்" கொண்டாடப்படும். அத்தருணம் கலாசாலை பழைய மாணவர்களை விழாவிற் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நா. தேவராசா,
செயலாளர்.
(தமிழ் மன்றம்)

மகளிர் அரசினர் ஆசிரிய கலாசாலை,
கோப்பாய்,
2-6-64. 386

---

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறியில் வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த நெசவாளர்கள் தேவை. முன் அனுபவம் காட்டி, நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வருகிற ஞாயிற்றுக்கிழமை(7-6-64) விண்ணப்பிக்கவும். வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்,176,காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 477

---

### தேவை

சீமெந்ட் வெறும் பைக்கட் தேவை, மில்க் வைற் சோப் தொழிற்சாலை, 527, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் 478

---

### தேவை

1. ஆசிரியர் / ஆசிரியை ஆங்கிலத்தில் தட்டச்சும், சுருக்கெழுத்தும் போதிப்பதற்கு முழு விபரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

2. லிகிதர்: கணக்கியலில் அனுபவம் வாய்ந்தவர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்ப முடிவு திகதி: 8-6-64.

அதிபர், வர்த்தக கலாசாலை, 230 1/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
4-6-64 481

---

### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஒயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புணகளிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துவாவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்: GABRIELS,Chunnakam. 375

---

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50

வைத்தியர் பரிபூரணக்கா கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்.

# "இந்திமொழி உபயோகத்தை அதிகரிக்கத்தீர்மானம்"

— சாஸ்திரி

புதுடில்லி, ஜூன் 3

வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதர் காரியாலயங்கள் நிர்வாக வசதியைக்கருதி ஆங்கிலத்தை உபயோகித்து வருகின்றபோதிலும் இந்தியை அதிகம் உபயோகிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாய் இந்தியாவின் பிரதம மந்திரியாகப் பதவியேற்கவிருக்கும் திரு. லால்பகதூர் சாஸ்திரி இன்று ராஜ்யசபையில் அறிவித்தார்.

வெளிநாடுகளில் பதவியேற்கும் இந்திய தூதர்கள் இப்பொழுது தங்கள் பதவிப்பத்திரங்களை இந்தியிலேயே சமர்ப்பிப்பதாகவும் திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

## 'நாட்டிலே கல்வியறிவு முன்னேறவேண்டும்'

— அநுராதபுர எம். பி.

அநுராதபுரம், புதன்

"நாடு முன்னேற வேண்டுமானால், நாட்டிலே கல்வியறிவு முன்னேற வேண்டும்" என்று அநுராதபுர எம். பி. திரு. கே. பி. ரத்னயக்கா நிவற்றக செட்டிய வித்தியாலய பொருட்காட்சித் திறப்புவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "வடமத்திய மாகாணத்தில் அதிகமானளவு மகா வித்தியாலயங்களை கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறதென்றும் அநுராதபுரத் தொகுதிக்கு ஒரு மகாவித்தியாலயம் அமைக்கப்படும்" என்றும் கூறினார்.

நிவற்றக செட்டிய வித்தியாலய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வித்தியாலயத்தின் 30-வது வருடவிழாவின் பொருட்காட்சியை வடமத்திய மாகாண உதவி கல்வி அதிகாரி செல்வி எவலின் பெர்னாண்டோ திறந்துவைத்தார்.

திரு. அசோகா ஜயரத்ன, செல்வி எவலின் பெனாண்டோ, அநுராதபுர அரசாங்க அதிபர் உபாலி குணரத்தின ஆகியோரும் பேசினார்கள்.

## சங்கீதப் போட்டி முடிவுகள்

அநுராதபுரம், புதன்

அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சங்கீதப் போட்டியில் பின்வருவோர் வெற்றியடைந்தனர்.

மேற்பிரிவு: பூபதி நா, கமலேஸ்வரி இ, பத்மசுந்தரி நா.

மத்திய பிரிவு: பாலசுப்பிரமணியம் நா, முத்துச்சாமி செ, சனூன் ப.

கீழ்ப்பிரிவு: புவனேஸ்வரி ச, யசோதை ந, சித்திஜமீலா இ.

ஆரம்ப பிரிவு: தேவராசா ச, கேதீஸ்வரன் ந, முத்துபுகாரி பாத்தும்மா அ.

இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இப்போட்டியில் பார்வதி இல்லமும், சரஸ்வதி இல்லமும் தலா 14 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், 8 புள்ளிகளைப் பெற்ற இலக்குமி இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

போட்டிகளுக்கு திருமதி எம். பொன்னம்பலம், திருமதி எம். பாலசுப்பிரமணியம், திரு. சி. நடராசலிங்கம் ஆகிய மூவரும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

## நாடக விழா

கொழும்பு, திங்கள்

கொழும்பு கலைச் சங்கம் வருகிற அக்டோபரில் நாடகவிழாவொன்றை நடத்த தீர்மானித்துள்ளது இந்தவிழாவில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த நாடகத்துக்கு 9 பரிசில்கள் அளிக்கப்படவிருக்கின்றன.

## சுவாமி பிரேமாத்மாநந்தா

வெள்ளவத்தை, புதன்

கல்கத்தாவில் திடீர் சுகவீனமடைந்து அங்கு சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த கொழும்பு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி பிரேமாத்மானந்தா பூரண குணமடைந்து கொழும்பு திரும்பியுள்ளார்.

## மகாகும்பாபிஷேகம்

புங்குடுதீவு, புதன்

புங்குடுதீவு மகாமுத்துமாரி அம்பாள் கோயில் மகாகும்பாபிஷேகத்துக்கான பூசைகள் இம்மாதம் 9-ம் தேதி ஆரம்பமாகி 12-ம் தேதி பகல் மகா கும்பாபிஷேகம் நடைபெறுமென அறிவிக்கப்படுகிறது.

## சேர் நிக்கலஸ் தலைவரானார்

கொழும்பு, புதன்

சுகாதார அமைச்சர் பதியுதீன் மஹ்மூத் பல்கலைக்கழக உபவேந்தர் சேர் நிக்கலஸ் அட்டிக்கலையை இலங்கைமருத்துவக் கவுன்ஸிலின் தலைவராக நியமனஞ்செய்துள்ளார்.

1937-ம் ஆண்டிலிருந்து சேர் நிக்கலஸ் அந்தக் கவுன்சிலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினராக இருந்துவருகிறார். 1957-ம் ஆண்டில் கவுன்ஸிலின் உப-தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதுவரை இலங்கை மருத்துவக கவுன்ஸிலின் தலைவராக, சுகாதாரசேவை நிருவாகியே தமது பதவி அந்தஸ்து காரணமாக நியமனஞ்செய்யப்படுவதுண்டு. இந்த ஆண்டில் முதன்முறையாக இந்த வழக்கம் மீறப்பட்டு வெளியார் ஒருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## 'இலங்கையர் சோம்பேறிகள்'

நாவலப்பிட்டி, புதன்

"நமது நாட்டில் எதையும் உண்டுபண்ணக் கூடியதாக நீர், நில, சீதோஷ்ண வசதிகள் இருந்த போதிலும் இலங்கையராகிய நாம் மிகவும் சோம்பேறிகளாக இருப்பதால் அவற்றைத் தக்கமுறையில் பயன்படுத்தமுடியாமல் இருக்கின்றது. உலகத்திலேயே இலங்கையர்கள் தான் மிகவும் சோம்பேறிகள்" என்று இங்கு நடைபெற்ற சோவியத் நட்புறவுச்சங்க கூட்டத்தில் பேசுகையில் திரு. பிலிப் குணவர்த்தன தெரிவித்தார். அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களுக்குரிய கடமைகளை முற்றிலும் செய்வதில்லை என்றும், சி. சி. எஸ். உத்தியோகத்தர்களிடம் திறமையின்மை இருப்பதாகவும்அவர் மேலும் குறிப்பிட்டார்.

## கொழும்பில் "நேரு வீதி"

கொழும்பு, புதன்

புறக்கோட்டையில் உள்ள செட்டியார்தெரு "நேரு வீதி" எனப் பெயரிடப்படவிருக்கின்றது. பாரத ஐக்கிய முன்னணியினரும், ஐக்கிய தமிழர் முன்னணியும் இத்தெருவின் பெயரை நேருவின் நினைவாக 'நேரு வீதி' என மாற்றவேண்டுமென கேட்டுக்கொண்டதற்கு மேயர் திரு. வி. ஏ. சுகததாசா ஒப்புக்கொண்டு அங்கீகாரம் வழங்கியுள்ளார். 56 வருடங்களாக மனிதகுலத்துக்கு சேவை செய்த மாபெரும் தலைவரின் ஞாபகமாக தெருவுக்கு பெயரிடுவது மகிழ்ச்சிக்குரியதெனவும் மேயர் தெரிவித்துள்ளார்.

## நேரு முத்திரை

சென்னை, ஜூன் 3

நேருவுக்குத் தகுந்த ஞாபகச் சின்னம் ஒன்றை சென்னையில் நிறுவக் கார்ப்பரேஷன் உத்தேசித்திருக்கிறது. இது சம்பந்தமாக வருகிற 6-ந் திகதி கட்சித் தலைவர்கள், எம். எல். ஏ.க்கள், எம். பி.கள், மற்றும் பிரமுகர்கள் ஆகியோரடங்கிய ஒரு கூட்டத்தை மேயர் கிருஷ்ணமூர்த்தி கூட்டுகிறார்.

நேருஜியின் இறுதியாத்திரையைச் சித்தரிக்கும் தபால் தலை, அஸ்தி கரைக்கப்படும் ஜூன் 8-ந் திகதி வெளியாகும். இதன் விலை 15 பைசா. நவம்பர் 14-ந் திகதி நேருவின் பிறந்த தினத்தன்று பல்வேறு வகையான நினைவுமுத்திரைகள் வெளியிடப்படும்.

## நேருஜியின் மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், வியாழன்

நேருஜியின் மறைவு குறித்து அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 'மலர் விழி' ஆசிரியர் திரு. எம். சி. இயேசுதாசன் இல்லத்தில் சென்ற திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு அனுதாபக் கூட்டமொன்று நடைபெற்றது.

## மறைவுக்கு முன் உதவி அனுப்பினார்

பிரதம மந்திரி தேசிய நிவாரணநிதியிலிருந்து ரு 5,000த்துக்கான செக்கில் மே 21-ந் திகதி கையெழுத்திட்டு, மதுரை நகரசபைத் தலைவருக்கு அவர் அனுப்பினார்.

இந்தப் பள்ளி விபத்தில் 35 மாணவிகள் மாண்டனர்.

## நேருஜியின் மறைவுக்கு அனுதாபம்

வவனியா, புதன்

"பாரதம் ஒரு தவப்புதல்வனையும், ஆசியா ஒரு வழிகாட்டியையும் இலங்கை ஒரு ஆலோசகனையும் இழந்துவிட்டது." இவ்வாறு வவனியா நகரசபைத்தலைவர் எம்.பொன்னையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கூறினார்.

வவனியா மாவட்ட அதிபர், வவனியா தக்கிணாராமய விஹாரை பௌத்த குரு, பண்டிதர் எம்.எஸ்.கந்தையா,ஜனாப் எம். எம். லெப்பை ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர். இக்கூட்டம் வவனியா கம்யூனிஸ்ட் கட்சிக் கிளையின் ஆதரவில் நடைபெற்றது.

வவனியா மாவட்ட அதிபர் பேசுகையில் "ஆசியா ஒரு சிறந்த வழிகாட்டியை இழந்துவிட்டது"என கூறினார்.

## பத்திரிகைக் கமிஷன்முன் சபாநாயகர் சாட்சியம்

கொழும்பு, புதன்

பத்திரிகைக் கமிஷன் முன் நேற்று சாட்சியமளித்த சபாநாயகர் திரு. ஹியு. பெர்னாண்டோ தமக்கு திரு. தாஸி விதாஜி என்பவரைத் தெரியவே தெரியாது என்று கூறினார்.

என்னை கார்ப்பரேஷனைச் சேர்ந்த பொதுஜன தொடர்பு அதிகாரி திரு. எல், ஏ. பி. பெரேரா சென்ற மாதம் 27-ம் திகதி அளித்த சாட்சியத்துக்குப் பதிலளிக்கும் வகையில் தெரிவிக்கையிலேயே திரு. ஹியு. பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

## நீதிமன்றத்தில்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னுவத்தினரும் எப்பொழுதும் தங்கள் துப்பாக்கிகளை தங்களுடன் கொண்டுசெல்கின்றனர். அத் துப்பாக்கிகள் எப்பொழுதும் ஆயத்தமாக தோட்டா நிரப்பப்பட்டிருக்கும்.

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா எதிர்வரும் வெள்ளிக்கிழமை புரட்சி சதி வழக்கில் சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆசிரியர்களுக்கு சிங்கள தேர்ச்சி நிபந்தனை

## கூட்டுநடவடிக்கை எடுக்க அதிபர்சங்கம் யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

தலைமை ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், உதவிஅதிபர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டுமெனவும் இல்லையேல் சம்பள உயர்வு நிறுத்தப்படுமெனவும் கல்விப்பகுதி விடுத்துள்ள சுற்றறிக்கைபற்றி ஆராய்வதற்கும் இதுசம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி முடிவு செய்வதற்கும் வடபகுதி கல்லூரி அதிபர்கள் சங்கம் இம்மாதம் ஆறாந் திகதி கூடவிருக்கிறது.

ஆசிரியர்களை கல்விப்பகுதியின் இச்சுற்றறிக்கை வெகுவாகப் பாதிக்கும் என்றும் எனவே இவ்விஷயத்தில் கல்லூரி அதிபர்கள் எல்லோரும் சேர்ந்து முக்கியமான முடிவு செய்யவேண்டியது அவசியமென்றும் கல்லூரி அதிபர்கள் சங்கம் கருதுவதாகத் தெரிகிறது.

தலைமை ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்களை மட்டுமல்லாது தமிழ், ஆங்கில ஆசிரியர்களுட்பட ஆசிரிய சமூகத்தையே அரசாங்கத்தின் இன உத்தியோக மொழிச்சட்ட அமுல் உத்தரவு பாதிக்குமாதலால் தமிழ் ஆசிரியர்களும் ஆங்கில ஆசிரியர்களும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளும் ஒரு பிரேரணை கல்லூரி அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் கொண்டுவரப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது.

# "காலஞ்சென்றவர் எவ்விதம் கொலை செய்யப்பட்டார் என்று தெரியாது"

## பண்டியந்தாழ்வு கொலை வழக்கில் எதிரிகளின் சகோதரி சாட்சியம்

யாழ்பபாணம், வியா.

"எனது அம்மாவின் ஆசைநாயகனான காலஞ்சென்ற திரு. ஜோசேப்பு செல்வரத்தினம் எவ்விதம் கொலை செய்யப்பட்டார் என்பது எனக்கு தெரியாது. அவர் கொலைசெய்யப்பட்டுக்கிடந்தார் என்பது கூட சம்பவம் நடந்த தினம் நள்ளிரவில் அம்மா குழறிய போதுதான் தெரியும்."

இவ்வாறு பண்டியந்தாழ்வு கொலை வழக்கு விசாரணையில் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. டபிள்யு. அரசுவால்டன் முன்னிலையில் 21 வயதுள்ள பிலோமினா சாட்சியமளிக்கும் போதுகுறிப்பிட்டார்.

இவ்வழக்கில் கந்தையா இராஜரத்தினம், கந்தையா ஜெயரத்தினம், கந்தையா யோகரத்தினம் ஆகிய பண்டியந்தாழ்வைச் சேர்ந்த மூன்று சகோதரர்களும் கந்தையா மயில்வாகனம், பொன்னர் கனகசபை ஆகியோரும் சேர்ந்து சென்ற டிசம்பர் மாதம் 24-ந் திகதி பண்டியந்தாழ்வு வியாபாரி திரு. ஜோசேப்பு செல்வரத்தினம் என்பவரை கொலை செய்வததாக யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

கந்தையாவின் வகள் பிலோமினா (21 வயது) சாட்சியமளித்த போது குறிப்பிட்டதாவது:

காலஞ் சென்ற செல்வரத்தினம் எனது சிறிய - தகப்பன் முறையானவர். எதிரிகளுள் முதல் மூவரும் எனது சகோதரர்கள். 4-வது எதிரி 1-வது எதிரியின் மனைவியின் சகோதரியை விவாகஞ் செய்தவர். முதல் எதிரி காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் பணியாளராகக் கடமையாற்றுகிறார். இரண்டாவது எதிரி ஒரு மின்சாரத் தொழிலாளி, மூன்றாவது எதிரி கரையூரில் வியாபாரஞ் செய்கின்றார். நாலாவது எதிரி அரசாங்க உணவுப் பயிர்ச் செய்கை மேற்பார்வையாளர். இரண்டாவது எதிரி எனக்குரிய காணியில் ஒரு வீடு கட்ட உதவுகிறார்.

அன்று முதலாம், இரண்டாம், மூன்றும் எதிரிகள் அம்மாவை காண வந்தனர். அம்மா நள்ளிரவில் எனது சிறியதகப்பனை யாரோ கொலை செய்து விட்டார்களெனக் கதறினார். அவர் கொலை செய்யப்பட்டுள்ளாரென்பது அப்பொழுதுதான் எனக்குத் தெரியும். அவர் எவ்விதம் கொலை செய்யப்பட்டாரென்பது எனக்குத் தெரியாது.

திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ரீ. கனேசலிங்கம் முதல் மூன்று எதிரிகள் சார்பிலும் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. எம். பாலசுந்தரம் நாலாம் ஐந்தாம் எதிரிகள் சார்பிலும் ஆஜரானார்கள்.

## சாஸ்திரிக்கு ஸ்ரீமா வாழ்த்து

புதுடில்லி,ஜூன் 3

இந்தியாவின் புதிய பிரதமராக திரு. லால் பகதூர் சாஸ்திரி நியமிக்கப்பட்டிருப்பது குறித்து பிரிட்டிஷ் பிரதமர் சர் அலெக் டக்ளஸ் ஹியூம் பாராட்டுத் தெரிவிதுள்ளார்.

இருநாடுகளின் உறவுகளும் மேலும் வலுப்பெறும் என்று தாம் எதிர்பார்ப்பதாக ஜப்பான் பிரதமர் இக்கேடா, இந்திய பிரதமருக்கு அனுப்பியுள்ள பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். மேற்கு ஜெர்மனியும் பாராட்டுச்செய்தி அனுப்பியுள்ளது.

இலங்கைப்பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் இந்திய - இலங்கை உறவுகள் விருத்திபெறும் என்று நம்புவதாக குறிபபிட்டுள்ளார்.

## இன்று

தீவுப்பகுதி எம். பி.யும் தமிழரசுக்கட்சி அங்கத்தவருமான திரு. வே. அ. கந்தையா இயற்கையெய்திய ஓராண்டு ஞாபகார்த்த தினத்தைக் கொண்டாடுமுகமாக மாலை 6 மணிக்கு புங்குடுதீவு, பெருங்காடு கந்தசுவாமி கோவில் முன்றலில் ஞாபகார்த்தக் கூட்டம் நடைபெறும்.

பண்டித ஜவஹர்லால் நேருவின் மறைவுக்கும் அநுதாபக் கூட்டம் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### இராசதுரை

தென் இந்திய திருச்சபை டயசீஸ் கந்தோரில் வேலை செய்தவரும், அமெரிக்கன் மிஷன் பிஷப்பின் காரியதரிசியும், தேவ அருளின் அருமைக்கணவரும், பிறிம் றோஸ், லிடியா ஆகியோரின் தந்தையுமான செல்லையா எட்வேட்ஸ் ரீப்பன் இராசதுரை நேற்று காலமானார். அன்னாரின் மரணக்கிரியை இன்று கொக்குவிலிலுள்ள 3-ம் கட்டை இல்லத்தில் பி. ப. 4 மணிக்கு நடைபெறும். 5 மணிக்கு மரண அடக்கத்துக்கு பண்டத்தருப்புக்கு எடுத்துச் செல்லப்படும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 55-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.